IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**STC No. 2575/2016**

**Dw**2 – விஜயகுமார்   த/பெ. தெய்வசிகாமணி

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths  Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 25.05.2026.**

**எதிரி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்ததால் நான் இன்று சாட்சியம் அளிக்கிறேன்.  புகார்தாரர் எனக்கு சகலை உறவு முறை என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் நான் நாச்சிமுத்து என்பவருக்கு எதிராக  STC. 1611/2016 வழக்கு தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது STC. 1611/2016 வழக்கில் நான் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரம் என்றால் சரிதான். **பிரமாணப் பத்திரத்தின் சான்றிட்ட நகல், எ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. என்னுடைய மாமனார் பெயர் குப்புசாமி என்றால் சரிதான்.  STC. 1611/2016 வழக்கில் நான் என்னுடைய மாமனாருக்கு வர வேண்டிய தொகைக்காக மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. STC. 1611/2016 வழக்கில் நானும், அந்த வழக்கின் எதிரியும் சமாதானமாக சென்று விட்டோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் கண்டுள்ள தொகையை முழுமையாக நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான்.  STC. 1611/2016 வழக்கில் எதிரி கேட்டுக் கொண்டதன் பேரில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. STC. 1611/2016 வழக்கில் நான் ஆஜராகததால் தள்ளுபடி ஆனது என்றால் சரிதான் எனக்கு தொகை வந்து விட்டதாலும், எதிரி கேட்டுக் கொண்டதாலும் நான்

ஆஜராகவில்லை. இந்த வழக்கின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை**

1. STC. 1611/2016 வழக்கில் எதிரியிடம் நான் பணம் பெற்றுக் கொண்டதை சாட்சியத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை